## கொள்கை, ஆராய்ச்சி & மதிப்பாய்வு

### / இனம் பற்றிய, சிதறலாகிவிட்ட தரவுகளின் சேகரிப்புக்கான கட்டமைப்பு மற்றும் வழிகாட்டுதல்கள்

இன அடிப்படையிலான தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அரசு மற்றும் கல்வி நிறுவனங்கள் மூலமாக சிதறலாகிவிட்ட தரவுகள் பற்றி அறிக்கை அளித்தல் ஆகியவற்றை வலுப்படுத்தி இயல்தரமானதாக ஆக்குவதற்காக.

### / இனப்பாகுபாட்டுக்கு எதிரான தாக்கம் பற்றிய மதிப்பீட்டுக்கான கட்டமைப்பு

அரசு மற்றும் கல்வி நிறுவன்ங்களின் நலத்திட்டங்கள் மற்றும் கொள்கைகளினால் வெவ்வேறு உள்ளூர் மற்றும் இனவாரியாக்கப்பட்ட குழுக்கள் எப்படி பாதிக்கப்படக்கூடும் என்பதை ஆராய்ந்து, மனமறியாமல் மேற்கொள்ளும் பாரபட்சத்தை, சாதகமான வகையில் எதிர் நோக்கி அகற்றுவதற்காக.



## நிலைத்து நிற்கும் தன்மை & பொறுப்பு கொடுக்கும் தன்மை

### / இனப்பாகுபாட்டுக்கு எதிரான சட்டவடிவு அமைத்தல்:

இனம் சம்பந்தமான தரவுகளைச் சேகரிப்புக்கான தர நிலைகள், மற்றும் இனப்பாகுபாட்டுக்கு எதிரான தாக்கம் பற்றிய மதிப்பீட்டுக்கான கட்டமைப்பினை உபயோகித்துக்கொள்ள, நிறுவன அமைப்புக்களைக் கட்டாயமாக்குவதற்காக, அரசுக்கு அதிகாரம் கொடுக்கின்ற முன்மொழியப்பட்ட சட்ட வடிவினை, அரசின் போக்கிலிருக்கும் இனப்பாகுபாட்டுக்கு எதிரான கடமையை நிறைவேற்றுவதை எதுவாக்குவதற்காக - அப்படி ஒரு சட்டம் இயற்றப்பட்டால். இந்த முன்மொழியப்படும் சட்ட வடிவானது இனப்பாகுபாட்டுக்கு எதிரான முனைப்புக்கள், அளவிடக்கூடிய இலக்கு எண்ணிக்கை, பொது மக்களுக்குத் தெரிவித்தல், சமுதாயத்தினரிடையே கலந்துரையாடுதல் ஆகியவற்றுக்கும்கூட பல வருடங்களுக்கான யுக்திரீதியான புதுப்பிக்கத்தக்க திட்டங்கள் மூலமாக வழி வகுக்கும்.

### / முன்னேற்றம் பற்றி பொதுமக்களுக்கு அறிவித்தல்

முன்னோக்கி செல்வதற்கான சிறந்த வழியின் போக்கில் இருக்கும் முடிவுகளைக் காட்டுதல் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களைப் பகிர்ந்துகொள்ள.



## பொதுமக்களுக்கான கல்வி & விழிப்புணர்வு

### / இலக்கு வைக்கப்பட்ட பொதுமக்களுக்கான கல்வி & விழிப்புணர்வு

கறுப்பின மக்கள்பால் கொண்டபாகுபாடு, உள்ளூர் மக்களுக்கு எதிரான பாகுபாடு, அரேபிய இனப் பாகுபாடு, இஸ்லாமிய பித்து பிடித்தல் மற்றும் சீக்கியர்கள் போன்றவர்கள் மீது காட்டப்படும் இனப்பாகுபாட்டின் இதர வடிவங்களின் மீது கவனம் செலுத்துவது உள்பட இனப்பாகுபாட்டின் பல்வேறு வடிவங்கள் பற்றிய பொதுமக்களின் புரிதலை ஆழப்பதியவைக்க.

இந்தப் பணியின் ஒரு அங்கமாக, இஸ்லாமிய பித்து பிடித்தலின் காரணங்கள் மற்றும் தாக்கங்கள் பற்றி சிறப்பாகப் புரிந்துகொள்வதற்காகவும், பொது மக்கள் பற்றிய கல்வியை உருவாக்கவும், இஸ்லாமியப் பித்துப் பிடிப்பதன் காரணமாக தெரிவிக்கப்பட்ட சம்பவங்கள் பற்றிய சேகரிப்பு மற்றும் பிரசுரங்களைத் தேடிக்கண்டறிவதற்கும் சமுதாய நிறுவன அமைப்புக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.



## சமுதாயக் கூட்டுமுனைப்பு

### / இனப்பாகுபாட்டின் எதிர்ப்புக்காக அமைச்சரின் கலந்தாலோசிப்புக்குழு

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் துணை நிற்பதற்காக, இனப்பாகுபாட்டுக்கு எதிரானதும் பிரிவு குறிப்பான வல்லமையுடன் இதனிடையே வாழ்ந்த அனுபவம் கொண்டவர்களுமான சமுதாயத்தில் பங்கு வகிப்பவர்களுடன் நடப்பிலேயே இருக்கின்றபடியான பேச்சுவார்த்தைக்கு வசதியமைக்க.

### / இனப்பாகுபாட்டுக்கு எதிரான மாநாடு

ஆராய்ச்சியாளர்கள், சமுதாயத்தில் பங்கு வகிப்பவர்கள், வல்லுனர்கள் மற்றும் கொள்கை இயற்றுபவர்கள் ஆகியோர் தங்கள் அறிவைப் பரிமாறிக்கொள்ளவும் அரசின் இனப்பாகுபாட்டுக்கு எதிரான கருவிகள், யுக்திகள் மற்றும் கட்டமைப்புக்களை மதிப்பீடு செய்வதற்கும் அவர்களை ஒன்று திரட்டுதல்.



## மக்கள் தொகை குறிப்பான இனப்பாகுபாட்டுக்கு எதிரான முனைப்புக்கள்

இனப்பாகுபாட்டை ஒட்டுமொத்தமாக சமாளிப்பது அத்தியாவசியம்; என்றாலும், ஒரு அளவு அனைத்துக்கும் பொருந்தும் என்னும் அணுகுமுறையைக் கொண்டிருக்கலாகாது. சில குறிப்பிட்ட சமுதாயத்தினர் எதிர்கொள்ளுகின்ற ஏறுக்குமாறான வேற்றுமைகளுக்கு தீர்வு காண்பதுவும் அத்தியாவசியமாகும்.

### / கறுப்பின மக்களின் மீதான இனப்பாகுபாட்டு எதிர்ப்புக்கான யுக்தி

பங்கேற்கும் அமைச்சகத்தின் முனைப்புக்களுக்கு வலுக்கொடுப்பதன் மூலமும் பொதுமக்களிடையே தெரிவிக்கப்படவிருக்கின்ற அளவிடக்கூடிய இலக்கு எண்னிக்கைகளை அமைப்பதன் மூலமும், குழந்தைகள் நலம், கல்வி மற்றும் நீதி போன்ற குறிப்பிட்ட பிரிவுகளில் கறுப்பின மக்களின் மீதான இனப்பாகுபாட்டு எதிர்ப்பிற்கு தீர்வு காண்பதற்காக.

### / உள்ளூர் மக்கள் மீது கவனம் செலுத்தப்பட்ட இனப்பாகுபாட்டுக்கு எதிரான யுக்தி

சீராய்வுக்கான அரசின் கடமையை செயல்முறை விளக்கம் காட்டி, உள்ளூர் மக்களாலேயே அனுபவிக்கப்படுகின்ற அமைப்பு முறையிலான இனப்பாகுபாட்டின் மீது இலக்கு வைப்பதற்கு, உள்ளூர் பங்கேற்பாளர்களுடன் கூட்டமைப்பு வைத்து உருவாக்கப்படுவதற்காக.

### / ஒன்ட்டேரியொ பொதுச் சேவை (OPS) இனப்பாகுபாட்டுக்கு எதிரான யுக்தி

பணியாளர் விழிப்புணர்வு மற்றும், அமைப்பு முறையிலான இனப்பாகுபாடு பற்றிய உணர்தன்மையை அதிகரிக்கவும் OPS மூலமாக இனப்பாகுபாட்டின் மீது போர் தொடுப்பதற்கான கருவிகள், தந்திரமான உபாயங்கள் மற்றும் இலக்குகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு.

A BETTER WAY FORWARD: ஒன்டேரியோவின் இனப்பாகுபாட்டுக்கு எதிரான யுக்திரீதியான 3 ஆண்டுக்கால திட்டமானது அரசின் கொள்கைகள், முடிவுகள் மற்றும் நலத்திட்டங்களில், அமைப்பு முறை கொண்ட இனப்பாகுபாட்டினைக் குறிவைத்து, அதன்மூலம் ஒவ்வொருவரும் தங்களுக்கான தனித்துவமான உள்பொதிந்த ஆற்றலை நிறைவேற்றியபடி சமூகத்தில் முழுமையாக பங்கேற்கமுடியும்.

அமைப்பு முறை கொண்ட இனப்பாகுபாடானது - கறுப்பின மக்கள் மீது பாகுபாடு காட்டுதல், உள்ளூர் மக்களிடயேயும் இருக்கும் பாகுபாடு, இஸ்லாமிய பித்து பிடித்தல் மற்றும் இனவாரியாக பிரிக்கப்பட்டுவிட்ட மற்ற சமுதாயத்தினரால் அனுபவிக்கப்படுகின்ற பாகுபாடு உள்பட - நமது தினசரி வாழ்விலும் முக்கியமான பொதுச்சேவைகளின் மீது நாம் சார்ந்திருக்கும் கல்வி நிறுவனங்களிலும் ஆழ வேரோடி இருக்கிறது. இது முன்னேற்றமடைந்தவர்கள் மற்றும் பின் தங்கிய மக்கள் ஆகியோருக்கு இடையில் உள்ள இடைவெளியை மேலும் அதிகரிக்கின்றது. இது ஏற்கத்தக்கதல்ல என்பதுடன், நாம் செய்யும் செயல்களை மாற்றிக்கொள்ளவும் இனரீதியான சமத்துவத்தை நோக்கி முன்னேறுவதில் இருக்கும் தடைகளை அகற்றவும் அவசியமாகிறது.

# A BETTER WAY FORWARD

## இனப்பாகுபாட்டுக்கு எதிரான ஒன்ட்டேரியோவின் யுக்தி ரீதியான 3 ஆண்டுக்கால திட்டம்

A BETTER WAY FORWARD: ஒன்டேரியோவின் இனப்பாகுபாட்டுக்கு எதிரான யுக்திரீதியான 3 ஆண்டுக்கால திட்டமானது ஒன்டேரியோவின் இனப்பாகுபாட்டுக்கு எதிரான இயக்கத்தினால் வழி நடத்தப்படும். மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்:

ontario.ca/antiracism



PHOTOGRAPHY **HASNAIN DATTU**

Ontario.ca/antiracism

Printed in Ontario, Canada on recycled paper.
© Queen's Printer for Ontario, 2017. ISBN 978-1-4606-9656-9

Ontario